சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - 2021-2022-ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகள்- பழங்குடியினர் நலத்துறையின் கீழ் தர்மபுரி, ஈரோடு, சேலம், திருச்சி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 39 உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கூடுதல் வகுப்பறைகளும் 34 உண்டி உறைவிடப் பள்ளிகளில் சுற்றுச் சுவர்களும் ரூ.21,09,16,000/- செலவில் கட்ட நிர்வாக அனுமதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2)துறை

அரசாணை (நிலை) எண்: 92 நாள் : 23.11.2021.

திருவள்ளுவர் ஆண்டு 2052 பிலவ வருடம்,
கார்த்திகை செவ்வாய் 7 –ஆம் நாள்.

படிக்கப்பட்டது:-

இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் ந.க. எண். பமே/ஈ1/8627/2021, நாள்.11.10.2021.

*****

ஆணை:

08.09.2021 அன்று நடைபெற்ற 2021-2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் திருத்திய வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

**“பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 318 உண்டி உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில், தர்மபுரி, ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள 14 தொடக்கப்பள்ளிகள், 11 நடுநிலைப்பள்ளிகள், 5 உயர்நிலைப்பள்ளிகள், 9 மேல்நிலைப்பள்ளிகள் மொத்தம் 39 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.15 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகளும், 45 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.6.13 கோடி செலவில் சுற்றுச்சுவர்களும் மொத்தம் ரூ.21.13 கோடி செலவில் கட்டப்படும்”**

2. மேற்காணும் அமைச்சர் ஆதிதிராவிடர் நலம் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்கள் தனது 11.10.2021 நாளிட்ட கடிதத்தில், பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 10 மாவட்டங்களில் செயல்படும் 39 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் பழங்குடியினர் நல மாணவ / மாணவியர்களின் கல்வி நலனைக் கருதி 14 தொடக்கப்பள்ளிகளுக்கு 28 வகுப்பறைகளும், 11 நடுநிலைப் பள்ளிகளுக்கு 24 வகுப்பறைகளும், 5 உயர்நிலைப்பள்ளிகளுக்கு 17 வகுப்பறைகளும் மற்றும் 9 மேல்நிலைப் பள்ளிக்கு 31 வகுப்பறைகளும் ஆக மொத்தம் 100 வகுப்பறைகள் கூடுதலாக தேவைப்படுவதாகவும் தாட்கோவிடமிருந்து ஒரு வகுப்பறை கட்டுவதற்கு ரூ.23.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு வரப்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட அறிவிப்பில் ஒரு வகுப்பறை ரூ.15.00 இலட்சத்தில் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது விலைவாசி ஏற்றம் காரணமாக ஒரு வகுப்பறைக்கு ரூ.23.00 இலட்சம் தாட்கோவால் கோரப்பட்டுள்ளது என்றும், எனவே திட்ட மதிப்பீட்டிற்கு ஏற்றவாறு 100 வகுப்பறைகளிலிருந்து 65 வகுப்பறைகளாகக் குறைத்து இணைப்பு I-ல் காணும் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.1495 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது என்றும் மேலும், 12 மாவட்டங்களில் இயங்கும் 34 பழங்குடியினர் நல உண்டி உறைவிட தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் வனத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு என இணைப்பு II-ல் கண்டுள்ள 34 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.614.16 இலட்சத்தில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படும் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் படிக்கும் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 39 உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.1495.00 இலட்சம் (பதினான்கு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம்) மற்றும் 34 உண்டி உறைவிட பள்ளிகளில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.614.16 இலட்சம் (ரூபாய் ஆறு கோடியே பதினான்கு இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ. 2109.16 இலட்சம் (ரூபாய் இருபத்தொரு கோடியே ஒன்பது இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) தேவைப்படுகிறது என்றும், மேற்காணும் கட்டுமானப் பணிகளை செய்ய நிர்வாக அனுமதியும் செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பும் அளித்து அரசாணை வழங்குமாறும் அரசினைக் கோரியுள்ளார்.

3. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஆய்வுக்குப்பின், மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் நலம் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க பழங்குடியினர் நலத்துறையின் கீழ் தர்மபுரி, ஈரோடு, சேலம், திருச்சி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இணைப்பு I-ல் உள்ள 39 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.14,95,00,000/- (ரூபாய் பதினான்கு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) செலவில் 65 கூடுதல் வகுப்பறைகளும் இணைப்பு II-ல் உள்ள 34 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.6,14,16,000/- (ரூபாய் ஆறு கோடியே பதினான்கு இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) செலவில் சுற்றுச் சுவர்களும் என மொத்தம் ரூ.21,09,16,000/- (இருபத்தொரு கோடியே ஒன்பது இலட்சத்து பதினாறாயிரம்) செலவில் தாட்கோவின் மூலம் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு. எண்.43377/நிதி(ஆதி(ம)பந)த் துறை/2021, நாள்.13.10.2021 -இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசகன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 600 005.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-600 018.
மாவட்ட ஆட்சியர், தர்மபுரி, ஈரோடு, சேலம், திருச்சி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் நீலகிரி.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், தர்மபுரி, ஈரோடு, சேலம், திருச்சி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் நீலகிரி.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

முதன்மை செயலாளரின் தனிச் செயலர், சென்னை - 600 009.

நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை -600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு.1 / ப.மே.1/ ஆதிந.5 )

துறை, சென்னை -600 009.

இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஞா. தங்கம்
23.11.2021
பிரிவு அலுவலர்.

**இணைப்பு-I**

**அரசாணை (நிலை) எண். 92, ஆதி(ம)பந(ஆதிந2(1)) துறை, நாள். 23.11.2021**

| கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் ஆரம்பப்பள்ளிகள் விவரம் | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் | கட்டப்படும் வகுப்பறைகள் (ஒரு வகுப்பறைக்கு ரூ.23 இலட்சம் வீதம்) | தொகை (ரூ.) |
| 1 | தர்மபுரி | எஸ். தாதம்பட்டி, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| | | கல்நாடு, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| | | மல்லூத்து, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| 2 | சேலம் | கும்பிபாடி, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| | | குண்டூர், உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| | | பெலாப்பாடி, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| | | பெரியவேலாம்பட்டி, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| | | மணியார்குண்டம், உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| 3 | திருநெல்வேலி | மேலணை பாபநாசம், உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| 4 | திருப்பத்தூர் | அத்தனாவூர் , உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| | | நெல்லிப்பட்டு , உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி (ஜவ்வாதுமலை) | 1 | 23,00,000 |
| 5 | திருவண்ணா மலை | தாதங்குப்பம், உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | வேலூர் | தெள்ளை, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 | 23,00,000 |
| 7 | நீலகிரி | குஞ்சப்பனை, உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | **மொத்தம்** | **15** | **3,45,00,000** |

| **கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் நடுநிலைப்பள்ளிகள் விவரம்** | | | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **மாவட்டம்** | **பள்ளியின் பெயர்** | **கட்டப்படும் வகுப்பறைகள் (ஒரு வகுப்பறைக்கு ரூ.23 இலட்சம் வீதம்)** | **தொகை (ரூ.)** |
| 1 | தர்மபுரி | பேரேரி, உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | மாங்கடை, உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | அரசநத்தம், உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 2 | கள்ளக்குறிச்சி | எழுத்தூர், உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 3 | சேலம் | வாழவந்தி, உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | தூலாங்குறிச்சி, உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | ஆலடிப்பட்டி, உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 4 | திருச்சி | புத்தூர், உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | நாகூர், உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 5 | திருவண்ணாமலை | ஊர்க்கவுண்டனூர், உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 6 | நீலகிரி | தொரப்பள்ளி, உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | **மொத்தம்** | **22** | **5,06,00,000** |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | சேலம் | கரியகோயில்வளவு, உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | அருநூத்துமலை, உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 5 | திருச்சி | சின்ன இலுப்பூர், உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 6 | திருவண்ணாமலை | ஆட்டியானூர், உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | பட்டரைக்காடு, உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | **மொத்தம்** | **18** | **4,14,00,000** |
| | | **நிகர மொத்தம்** | **65** | **14,65,00,000** |

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ஜா. தங்கம்
23.11.2021
பிரிவு அலுவலர்.

| கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் உயர்நிலைப்பள்ளிகள் விவரம் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் | கட்டப்படும் வகுப்பறைகள் (ஒரு வகுப்பறைக்கு ரூ.23 இலட்சம் வீதம்) | தொகை (ரூ.) |
| 1 | கள்ளக்குறிச்சி | பாச்சேரி, உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 2 | சேலம் | ஓடைகாட்டுப்புதூர், உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | கொடுங்கல், உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | குன்னூர், உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | அடிமலைப்புதூர், உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | **மொத்தம்** | **10** | **2,30,00,000** |

| கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் மேல்நிலைப்பள்ளிகள் விவரம் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் | கட்டப்படும் வகுப்பறைகள் (ஒரு வகுப்பறைக்கு ரூ.23 இலட்சம் வீதம்) | தொகை (ரூ.) |
| 1 | தர்மபுரி | நரிப்பள்ளி, உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 2 | ஈரோடு | பர்கூர், உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| 3 | கள்ளக்குறிச்சி | இன்னாடு, உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |
| | | கொட்டப்புத்தூர், உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 | 46,00,000 |

## இணைப்பு -2

## அரசாணை (நிலை) எண். 92, ஆதி(ம)பந(ஆதிந2(1)) துறை, நாள். 23.11.2021

| அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட பள்ளிகளுக்கு சுற்றுசுவர் கட்டுதல் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் | | மதிப்பீடு (இலட்சத்தில்) | மொத்த தொகை (இலட்சத்தில்) |
| 1 | கோயம்புத்தூர் | 1 | பாலமலை நடுநிலைப்பள்ளி | 2.50 | 2.50 |
| 2 | தருமபுரி | 2 | சித்தேரி மேல்நிலைப்பள்ளி | 10.00 | 61.00 |
| | | 3 | வாச்சாத்தி மேல்நிலைப்பள்ளி | 10.00 | |
| | | 4 | எலந்தகொட்டப்பட்டு நடுநிலைப்பள்ளி | 3.50 | |
| | | 5 | வெளம்பள்ளி தொடக்கப்பள்ளி | 30.00 | |
| | | 6 | வாழைத்தோட்டம் தொடக்கப்பள்ளி | 7.50 | |
| 3 | ஈரோடு | 7 | பர்கூர் மேல்நிலைப்பள்ளி | 23.00 | 59.63 |
| | | 8 | ஆசனூர் மேல்நிலைப்பள்ளி | 17.00 | |
| | | 9 | தலமலை உயர்நிலைப்பள்ளி | 17.00 | |
| | | 10 | சுண்டகரடு பெருமாபாளையம் தொடக்கப்பள்ளி | 2.63 | |
| 4 | கள்ளக்குறிச்சி | 11 | கொட்டப்புத்தூர் மேல்நிலைப்பள்ளி | 84.00 | 84.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | நாமக்கல் | 12 | வாழவந்திநாடு மேல்நிலைப்பள்ளி | 17.00 | 48.80 |
| | | 13 | செங்கரை மேல்நிலைப்பள்ளி | 6.00 | |
| | | 14 | செங்கரை தொடக்கப்பள்ளி | 15.80 | |
| | | 15 | கெடமலை தொடக்கப்பள்ளி | 10.00 | |
| 6 | சேலம் | 16 | கருமந்துறை மேல்நிலைப்பள்ளி | 5.00 | 100.00 |
| | | 17 | வெள்ளிக்கவுண்டனூர் மேல்நிலைப்பள்ளி | 50.00 | |
| | | 18 | அருநூத்துமலை தொடக்கப்பள்ளி | 5.00 | |
| | | 19 | தேக்கம்பட்டு தொடக்கப்பள்ளி | 5.00 | |
| | | 20 | ஓடைக்காட்டுப்புதூர் தொடக்கப்பள்ளி | 15.00 | |
| | | 21 | பெரியபக்களம் தொடக்கப்பள்ளி | 10.00 | |
| | | 22 | பெரியநாகூர் தொடக்கப்பள்ளி | 10.00 | |
| 7 | தென்காசி | 23 | தலையணை தொடக்கப்பள்ளி | 14.00 | 14.00 |
| 8 | திருச்சி | 24 | சின்னஇலுப்பூர் மேல்நிலைப்பள்ளி | 48.00 | 48.00 |
| 9 | திருப்பத்தூர் | 25 | அத்தனாவூர் தொடக்கப்பள்ளி | 15.00 | 25.00 |
| | | 26 | நடுகுப்பம் தொடக்கப்பள்ளி | 10.00 | |
| 10 | வேலூர் | 27 | குண்டுராணி தொடக்கப்பள்ளி | 6.50 | 13.00 |
| | | 28 | தெள்ளை தொடக்கப்பள்ளி | 6.50 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | நீலகிரி | 29 | தொரப்பள்ளி நடுநிலைப்பள்ளி | 25.00 | 82.23 |
| | | 30 | அரவேணு நடுநிலைப்பள்ளி | 6.60 | |
| | | 31 | திருச்சிக்கடி தொடக்கப்பள்ளி | 15.00 | |
| | | 32 | குஞ்சப்பணை தொடக்கப்பள்ளி | 11.63 | |
| | | 33 | மெட்டுக்கல் தொடக்கப்பள்ளி | 24.00 | |
| 12 | திருப்பத்தூர் | 34 | நெல்லிவாசல் மேல்நிலைப்பள்ளி | 76.00 | 76.00 |
| | | | | **மொத்தம்** | **614.16** |

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ஏ.ரா. தங்கம்
23.11.2021
பிரிவு அலுவலர்.